


விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதி தி.மு.க. வேட்பாளர் பிரபாகர ராஜாவை ஆதரித்து வடபழனி அருணாச்சலா வீதியில் கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவையின் தலைவர் வாகை சந்திரசேகர் வாக்கு சேகரித்தார். உடன் தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தொகுதிக்குட்பட்ட சோழவரம் ஒன்றிய பாடிய நல்லூர் ஊராட்சியில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மக்கள் நல ஆட்சியை தொடர்ந்து வலுப்படுத்தும் நோக்கில், மாதவரம் தொகுதியை மேலும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல உறுதியுடன், பொதுமக்களை நேரில் சந்தித்து வேட்பாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் வாக்கு சேகரித்தார். இந்நிகழ்வில் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கருணாகரன், ஊராட்சி மன்றத் தலைவர் உள்ளிட்ட திமுக தலைமையிலான மதசார்பற்ற கூட்டணியின் கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி

# தி.மு.கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் வீதி, வீதியாக தேர்தல் பிரச்சாரம் செய்கிறார்!

## சைதை மேற்கு பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிவிப்பு!

சென்னை, ஏப்.17-

மதசார்பற்ற முற்போக்குக் கூட்டணி சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மா.சுப்பிரமணியன் நேற்று (17-4-2026) வெள்ளிக்கிழமை 142வது வட்டத்தில் காலை 7 மணி முதல்

இரவு 9 மணி வரையும் வீதி, வீதியாக சென்று பொது மக்களிடம் வாக்குச் சேகரிக்கிறார்.

அதன் விவரம் வருமாறு:-

142வது வட்டம் - காலை 7 மணி முதல் 12.30 மணி வரை

பிராமின் தெரு கோயில் அருகில், பிராமின் சந்து, ஆலந்தூர் சாலை கே.பி. மண்டபம் சர்வீஸ் சாலை, ஆலந்தூர் சாலை, சாமியார்தோட்டம், புஜங்கராவ் தெரு, வி.வி.கோயில் தெரு வழியாக, செட்டித்தெரு, ஆலந்தூர் சாலை, அபித்காலனி திரும்பி, மசூதி தெரு, மசூதி பள்ளம், மசூதி சந்து, மசூதி தெரு வழியாக, கொத்தவால் சாவடி தெரு, பாரதியார் தெரு, இராமானுஜம் தெரு, தனசேகரன் தெரு, சின்னம்மாள் தெரு, வி.ஜி.பி. சாலை வழியாக, கருணாகரன் தெரு, வ.ஊ.சி. தெரு திரும்பி, நாராயணசாமி மெயின் தெரு, ராஜகோபால் தெரு, ராமசாமி தெரு, பாரதியார் தெரு வழியாக, கொத்தவால்சாவடி தெரு குமார் லாண்டரி, கொத்தவால்சாவடி தெரு விலாமரம் திரும்பி, நாராயணசாமி 2வது தெரு, துரைசாமி தோட்டம் சுற்றி வருதல், கொத்தவால்சாவடி, கவரைத் தெரு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு, சாஸ்திரி குடியிருப்பு திரும்பி, விலாமரம், கொத்தவால்சாவடி தெரு குமார் ஓட்டல் முடிவு.

மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை

கலைஞர் தெரு, திடீர்நகர், கோதாமேடு வாழ்விட மேம்பாட்டு குடியிருப்பு, சலவையாளர் காலனி 1 முதல் 3 தெருக்கள், அண்ணா நகர், அப்துல்ரசாக் தெரு, அப்துல் ரசாக் 2வது தெரு, விநாயகம் பேட்டை சந்து நிறைவு,

எனவே மேற்கண்ட வாக்குச் சேகரிப்பு நிகழ்வில் சைதை மேற்கு பகுதி நிர்வாகிகள், கூட்டணிக்கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் பங்கேற்றுச்சிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு சைதை மேற்கு பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி அறிவித்துள்ளார்.

### முதல்வர் நகர்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பில்

# துறைமுகம் தொகுதி வேட்பாளர் பி.கே. சேகர்பாபு வாக்கு சேகரித்தார்!





சென்னை, ஏப்.17-

சென்னை கிழக்கு மாவட்ட மதச் சார்பற்ற கூட்டணி கட்சி துறைமுகம் தொகுதி வேட்பாளர் பி கே சேகர்பாபு அவர்கள் இன்று 16/04/26 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் ஸ்டான்லி மருத்துவமனை அருகில் உள்ள முதல்வர் நகர்புற மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் வசிக்கும் மக்களிடம் வாக்கு கேட்கும் போது கழக ஆட்சி எப்படி 40 50 ஆண்டுகால பழமையான குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளை அகற்றி புதிய குடியிருப்புகளை கட்டி கொடுத்தது போல சாலையோரத்தில் வசிக்கும் மக்களின் நிலையை அறிந்து குறிப்பாக அந்த குடியிருப்பில் இருக்கும் பெண் பிள்ளைகள் அன்றாட செயல்பாடுகளை செய்வதற்கு ஒரு பாதுகாப்பு பெற்ற சூழல் இருப்பதை மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு அவர்கள் வாழ்வாதாரத்தை நிலை நாட்டுகின்ற வகையிலும் சுகாதாரமான வாழ்வு தருகின்ற வகையிலும் துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் 1470 புதிய குடியிருப்புகளை கொண்டு வந்து அந்த மக்களின் இருப்பிட வசதியை உறுதி செய்தும், அது வெறும் குடியிருப்புகளாக மட்டும் இருக்கக்கூடாது என்பதனை உணர்ந்து அப்பகுதி மக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பெறுவதற்கான நியாய விலை கடையையும் அங்கு இருக்கின்ற இளைஞர்கள் மக்கள் ஆரோக்கியமான உடலை பெறுவதற்கும் குளிரூட்டியுடன் கூடிய உடற்பயிற்சி கூடமும் அவர்கள் அறிவுத்திறனை வளர்க்கின்ற வகையில் பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் கொண்ட நூலகத்தையும், முதல்வர் படைப்பகத்தையும், அவர்கள் உடல் நலத்தை பேணுகின்ற வகையிலே மருத்துவமனைகள் என அனைத்தும் உள்ளடக்கிய ஒரு குடியிருப்பாக உருவாக்கித் தந்து மாபெரும் புரட்சி செய்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தான்.. மேலும் சாலையில் வசிக்கின்ற மக்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு வருகின்ற திராவிட மாடல் 2.0 ஆட்சியிலே சாலையிலே மக்கள் வசிக்காத வண்ணம் அனைவரையும் நகர்ப்பற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பில் அமர்த்துவது ஒன்றே லட்சியம் அதற்கான பணிகளை மேற்கொண்டு வருகிறோம் என்று சொல்லி அந்த மக்களிடையே வாக்கு சேகரித்தார்.

இந்த வாக்கு சேகரிப்பில் பகுதிக் கழகச் செயலாளஎஸ். இராஜசேகர், எஸ்.முரளி, இரா.நரேந்திரன், இசட். ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம். தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி,வெ.பரிமளம் ரஞ்சித் விஜயாலயன் பி.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல்.சத்திய நாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், லண்டன் க. முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் தோழமைக் கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுனில்மேத்யு ஏற்பாட்டில் முடிச்சூர் ஊராட்சியில்

# தாம்பரம் தொகுதி கழக வேட்பாளர் டாக்டர் கிருத்திகா தேவிக்கு உற்சாக வரவேற்பு!

## எஸ்.ஆர்.ராஜா எம். எல்.ஏ. – நீர் மோர் பந்தலை திறந்து வைத்தார்!

தாம்பரம், ஏப்.17

தாம்பரம் தொகுதி திமுக வேட்பாளர் டாக்டர் கிருத்திகா தேவி முடிச்சூர் ஊராட்சியில் வாக்கு சேகரிக்கும் போது, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் சுனில் மேத்யு செவ்வாழை வழங்கி வரவேற்று, மக்கள் தாகம் தீர்க்கும் தண்ணீர் பந்தலை தாம்பரம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ் ஆர் ராஜா திறந்து வைத்து பொதுமக்களுக்கு கீரை மற்றும் பழங்கள் வழங்கினார்.

உடன் ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி ஒன்றிய துணைச் செயலாளர் விநாயக மூர்த்தி, மஞ்சு ஜெயபாலன் முன்னாள் ஊராட்சி துணைச் செயலாளர் ஜெமின் மற்றும் மதிமுக மாவட்ட துணைச் செயலாளர் ஜெயசீலன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட துணைச் செயலாளர் பாஸ்கர், தேமுதிக ஒன்றிய செயலாளர் நாகராஜ்,

மாவட்ட வர்த்தக அணி துணை செயலாளர் பவுல் ராஜ், திமுக கிளை செயலாளர்கள் ரமேஷ், குமார், சுகுமார் கிளை நிர்வாகிகள் சங்கர், மணி, ராஜா, சுரேஷ், தனசேகரன், காந்தா, சாந்தி இளைஞர் அணி அமைப்பாளர்கள் ஜெபக்குமார், சதீஷ், சீனிவாசன், கார்த்திக், நூர்முகமது மற்றும் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# கழக வேட்பாளர் மயிலை த.வேலு

# 171 (அ) வட்டத்தில் வாக்கு சேகரிப்பு!

## வட்டச் செயலாளர் பா.பொன்னுசாமி அறிக்கை!

சென்னை, ஏப். 15-

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சென்னை தென்மேற்கு மாவட்டம் வெற்றி வேட்பாளர் மயிலை த.வேலு அவர்கள் 171 (அ) வட்டச் செயலாளர் பா.பொன்னுசாமி தலைமையில், தீவிர வாக்கு சேகரிப்பு இன்று (17.4.2026) வெள்ளிக்கிழமை 171 (அ) வட்டத்தில் மாலை 4.00 மணியளவில் பிரச்சாரம் செய்யும் இடங்கள் எஸ்.கே.பி. புரம், அன்னை தெரசா நகர், அறிஞர் அண்ணா நகர், சத்தியா நகர் ஆகிய இடங்களில் வாக்கு சேகரிக்கிறார்.

எனவே வட்டக்கழகத் திற்குட்பட்ட நிர்வாகிகள், மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள் பாகம் பொறுப்பாளர்கள் பாகம் உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பித்திட கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு 171 அ வட்டச் செயலாளர் பா.பொன்னுசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.





மயிலாப்பூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை ஆதரித்து தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைத் தலைவர் கி.நடராசன், பகுதிச் செயலாளர் எஸ்.முரளி, 124 வது வட்டச் செயலாளர் மா.பா.அன்பு ஆகியோரின் தலைமையில், உதயசூரியன் சின்னத்திற்கு பேரவை நிர்வாகிகள், மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் த. சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், அலுவலக பணியாளர்கள் சங்கப் பொதுச் செயலாளர் வி.மகேந்திரன் மற்றும் சங்க நிர்வாகிகள், முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.

### ச.பரமசிவம் - வே.கௌதமன் - மெட்டில்டா கோவிந்தராஜ் எம்.சி. முன்னிலையில்

# அண்ணாநகர் 101 வது வட்டத்தில் கழக வேட்பாளர் நே.சிற்றரசுவை ஆதரித்து வாக்கு சேகரிப்பு!

## வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் அறிக்கை!

சென்னை, ஏப். 17

சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் வடக்குப் பகுதி, 101 வது வட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டனி கழக வெற்றி வேட்பாளர் நே.சிற்றரசு ஆதரித்து வட்டக் கழகச் செயலாளர் க.கோவிந்தராஜ் தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர் ச.பரமசிவம், தொகுதிப் பார்வையாளர் வே.கௌதமன்,

101 வது வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலையில் 53, 81, 82, 83, 84, 85, 86, 87, 88, 89 ஆகிய பாகங்களில் இன்று (17.04.2026 வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில், வ.உ.சி. நகர் 6 வது தெரு, வ.உ.சி. நகர் 4 வது குறுக்கு தெரு, வ.உ.சி. நகர் மெயின் ரோடு, வ.உ.சி. நகர் நீயூ காலணி 1 வது தெரு, லட்சுமி அப்பன் மெண்ட், வ.உ.சி. 1, 2, 3 வது குறுக்கு தெருகள், வ.உ.சி. நகர் 5 வது குறுக்கு தெரு, வ.உ.சி நகர் குடிசை பகுதி, நேரு தெரு, ஜி.பிளாக் 9 வது, 10 வது, 12 வது, 18 வது தெருக்கள், எப்.பிளாக் 1 வது அவென்யூ, எப்.பிளாக் 10 வது தெரு, அண்ணா நகர், டி.பிளாக், 2 வது குறுக்கு தெரு, பாரத் பிளாட்ஸ் ஆர்.வி.நகர் மெயின் ரோடு, ஆர்.வி.நகர் 1, 2, 3, 4, 5, 6 ஆகிய குறுக்கு தெருக்கள், நியூ ஆற்காட் பிளாடஸ், புதிய போலிஸ் குடியிருப்பு, டி.பிளாக் 1 வது மெயின் ரோடு, டி.பிளாக் 1 வது தெரு, 3, 4, 5, 6, 7, 8, 9 வது தெருகளில் வாக்கு சேகரிக்கிறார்கள்.

எனவே BLA2, BLC, BYO, BDA, மாவட்ட துணை பகுதி துணை அமைப்பார்கள், மாவட்டப் பிரதிநிதிகள், பகுதி துணை அமைப்பாளர்கள், 101 வது வட்டக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கோட்டுகொள்கிறேன்.

இவ்வாறு 101 வது வட்டக் கழகச் செயலாளர் க. கோவிந்தராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



167–வது வார்டை சேர்ந்த துரைசாமி கார்டன், ஐயப்பா நகர், ஏ.ஜி.எஸ்.காலனி, எஸ்.பி.ஐ. காலனி விரிவு, தெற்கு பி.வி. நகர், எம்.ஜி.ஆர். ரோடு, இந்து காலனி 2வது பிரதான சாலை முழுவதும் ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12–வது மண்டலகுழு தலைவருமான என்.சந்திரன், ஆலந்தூர் தொகுதி தி.மு.க. வெற்றி வேட்பாளர் தா.மோ.அன்பரசனை ஆதரித்து 167–வது வட்ட கழக செயலாளர் ஜெ.நடராஜன், 167–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி துர்கா தேவி நடராஜன், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் உள்ளிட்டோர் வாக்கு சேகரித்தனர்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா சூளைப்பள்ளம் அன்னை சத்யா நகர், தந்தை பெரியார் நகர், ராஜீவ் காந்தி நகர், ஜெயலலிதா நகர், ஏரிக்கரை தெரு, பல்லவன் சாலை உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாக கழக அரசின் சாதனைகளை, 2026 ஆம் ஆண்டு கழக தேர்தல் அறிக்கை சிறப்பு அம்சங்களை தெரிவித்து வீடு வீடாக வாக்கு சேகரித்தார்.





ராயபுரம் மேற்கு பகுதி மாணவர் அணி பகுதி துணை அமைப்பாளர் பா. சக்திதாசன் ஏற்பாட்டில் ராயபுரம் வெற்றி வேட்பாளர் டாக்டர் சுபேர்கானுக்கு மாணவரணி சார்பில் உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர். உடன் 53 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பா வேளாங்கண்ணி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.